## ஸ்ரீ. சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார்

# முன்னுரை.

இப் புஸ்தகத்தில் பாரதியார் எடுத்த விஷயங்கள் மிகப் பெரியவை. விஷயங்களின் கவுரவம் ஒரு புறமிருக்க, தற்காலத்தில் தமிழ் வாசகநடை எவ்வாறிருக்க வேண்டுமென்பதை, பாரதியார் எழுதிய இச்சிறு புஸ்தகத்தில் கண்டு கற்கலாம். அர்த்த புஷ்டியில்லாத அரற்றலின்றி, சொன்னதையே சொல்லி பக்கங்கள் நிறைப்பது மின்றி, ஸ்படிகம் போன்ற தெளிவும் வைரம் போன்ற உறுதியும் பெற்று இலக்கணப் பிழைகள் ஒழிந்த பேச்சுத் தமிழையே எவ்வாறு ஆழ்ந்த கருத்துகளை எழுதவும் சித்தரிக்கவும் உபயோகப் படுத்தலாம் என்பதை பாரதியார் வசன நடையில் நாம் பார்க்கலாம். தமிழுக்குள் கிடக்கும் எல்லையற்ற சக்தியையும் லாகவத்தையும் பாரதியார் எழுத்துகளில் தமிழ் மக்கள் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். பயன் கொண்ட கற்பனா சக்தியும், கொழுந்துவிட்டெரியும் நாட்டன்பும், விசாலமான தரும ஞானமும், நோவாத ஹாஸ்யரஸமும், தமிழ்த்தாயின் செல்வக் குழந்தை, வரப்பிரஸாதர், பாரதியார் எழுதிய இந்நூலில் ஜ்வலிப்பதை அநுபவிக்கலாம்.

8—3—36.      ச. இரா.